

கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை, மக்களவைக் குழு துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள தயாநிதிமாறன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.




மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (12.06.2024) சென்னை, அரசு ஸ்டான்லி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 81வது மருத்துவ பட்டப்படிப்பு நிறைவு விழாவில் கலந்து கொண்டு மருத்துவ மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ் வழங்கினார். இந்நிகழ்வில் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் மரு.நாராயணசாமி, மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.ஜெ.சங்குமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி.சேகர், ஐட்ரீம் மூர்த்தி, அரசு ஸ்டான்லி மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.பாலாஜி, மருத்துவக்கல்லூரி துணை முதல்வர், மருத்துவமனை கண்காணிப்பாளர், நிலைய மருத்துவ அலுவலர், மருத்துவப் பேராசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

### ஜூன் 15 கோவையில் முப்பெரும் விழா :

# நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாகப் பங்கேற்பீர்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. அறிக்கை!



நாமக்கல், ஜூன் 14 - முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு மற்றும் “முப்பெரும் விழா” ஜூன்15 ஆம் தேதி மாலை 4 மணியளவில் கோயமுத்தூர் கொடிசியா மைதானத்தில் நடைபெற உள்ளது.

இதுகுறித்து நாமக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றியளித்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா சீர்மிகு வெற்றிக்கு கழகத்தை வழிநடத்திச் சென்ற தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்குப் பாராட்டு விழா என “முப்பெரும் விழா” நாளை (ஜூன் 15 ஆம் தேதி) மாலை 4 மணியளவில் கோயம்புத்தூரில் உள்ள கொடிசியா மைதானத்தில் நடைபெறுகிறது.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் நம் கூட்டணிக் கட்சித்தலைவர்கள் வெற்றிபெற்ற நாற்பது நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்ள உள்ளதால், நாமக்கல் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கிளைக் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், வாக்குச் சாவடி முகவர்கள், கழக உறுப்பினர்கள் என அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் அவர்கள் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகளை அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் செவ்வனே மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன் என அந்த அறிக்கையில் அவர் கூறியுள்ளார்.

### கோவையில் ஜூன் 15-ல் நடைபெறும்

# தி.மு.கழக முப்பெரும் விழாவில் பெருந்திரளாகப் பங்கேற்பீர்!

## திருவாரூர் மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ.அறிக்கை!



திருவாரூர்,ஜூன்14. கோவையில் நடைபெறும் தி.மு.கழக முப்பெரும் விழாவில் திருவாரூர் மாவட்டம் சார்பில் பெருமளவில் பங்கேற்கவேண்டும் என அழைப்பு விடுத்து மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ.,அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

இந்திய துணைக் கண்டமே திரும்பிப் பார்க்கும் ஒப்பாரும் மிக்காரும் இல்லா முதல்வராக , இந்தியாவின் பிறமாநிலங்கள் பின்பற்றும் வகையில் எண்ணற்ற நலத்திட்டங்களை மக்களுக்கு தந்து, தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி உள்ளிட்ட 40இடங்களிலும் அமோக வெற்றியை ஈட்டிய இந்தியா கூட்டணியின் நாயகர் கழக தலைவர் அவர்களின் வழிகாட்டுதல்களின்படி, மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா , நாற்பது நாடாளுமன்ற தொகுதிகளிலும் வெற்றி அளித்த தமிழ் நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா ,இந்த சீர்மிகுந்த வெற்றிக்கு கழகத்தை வழி நடத்திய தமிழ்நாடு முதல்வர் கழகத்தலைவர் அவர்களுக்கு பாராட்டுவிழா ஆகியவற்றை இணைத்து ஜூன் 15 அன்று கோவையில் நடைபெறுகிறது.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க முப்பெரும் விழாவிற்கு திருவாரூர் மாவட்டத்தில் இருந்து ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் வார்டு ,கிளைக்கழகங்களின் சார்பில் பெருந்திரளாக பங்கேற்க அழைக்கிறேன். அனைத்து பகுதிகளிலும் உள்ள மாநில, மாவட்ட ,ஒன்றிய ,நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், வாக்குசாடி முகவர்கள், கழக உடன்பிறப்புக்கள் அனைவரும் பெருந்திரளாக அணிதிரண்டு பங்கேற்று சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான பூண்டி. கே.கலைவாணன் அழைப்பு விடுத்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில்

# மௌலிவாக்கம் தி.க.பாஸ்கரன் இல்ல மணவிழா வரவேற்பு!

## டி.ஆர்.பாலு எம்.பி. – ஆர்.எஸ்.பாரதி – அமைச்சர்கள் வாழ்த்துரை!

காஞ்சிபுரம், ஜூன் 14- காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட ஆதி திராவிடர் நலக்குழு அமைப்பாளர் மௌலிவாக்கம் தி.க. பாஸ்கரன் - ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் சுஜாதா பாஸ்கரன் ஆகியோரின் புதல்வி பி.ரூபிகா தேவிக்கும், சென்னை மதுரவாயல் வட்டம், கே. ராஜேந்திரன் - ஆர். விமலா ஆகியோரின் புதல்வர் ஆர். வெங்கடேசனுக்கும் மணவிழா வரவேற்பு 10.6.2024 - திங்கள் கிழமை மாலை 6 மணியளவில் பரணிபுத்தூர் சக்தி பேலஸ் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இம்மணவிழா வரவேற்புக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ. அன்பரசன் தலைமையேற்று மணமக்களை வாழ்த்தினர்.

படப்பை ஆ. மனோகரன், ஏ.வந்தேமாதரம், சரஸ்வதி மனோகரன், உமாமகேஸ்வரி வந்தேமாதரம் ஆகியோர் வரவேற்றனர்.

ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ., டாக்டர் ஆர்.டி. அரசு, அ.தமிழ்மாறன், கோ.சத்தியமூர்த்தி, பட்டூர் எஸ்.ஜபருல்லா, கீதா ஆனந்தன், கே.எத்தி ராஜ், எம்.ஆர்.சீனி வாசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இம்மணவிழா வரவேற்பில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி சி.வி.கணேசன், டி.ஆர்.பி. ராஜா, டாக்டர் மா.மதிவேந்தன், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி தலைவர் கு. செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ., டாக்டர் எஸ். ஜெகத்ரட்சன் எம்.பி., அரசு கொறடா கோவி செழியன் ஆகியோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துத்தினர்.

இம்மணவிழா வரவேற்பில் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், மாவட்டச் செயலாளர்கள் க.சுந்தர், ஆவடி சா.மு. நாசர், மாதவரம் எஸ்.சுதர்சனம், நாடாளுமன்ற உறுப்பினர் சிறுவேடல் செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் இ. கருணாநிதி, எஸ்.ஆர்.ராஜா, சி.வி. எம்.பி.எழிலரசன், வரலட்சுமி மதுசூதனன், ப.தாயகம் கவி, எஸ்.அரவிந்த் ரமேஷ், காரம்பாக்கம் கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, ஜோசப் சாமுவேல் மற்றும் த.துரைசாமி, து. மூர்த்தி, வெ.விஸ்வநாதன், மீ.அ.வைதிய லிங்கம், வி.தமிழ்மணி, க.வசந்தகுமாரி, கோ. காமராஜ், மு. மகேஷ்குமார், எஸ். ஆர்.எல்.இதயவர்மன், பாலவாக்கம் த.விஸ்வ நாதன், நொளம்பூர் வே. ராஜன், பெருங்குடி எஸ். வி.ரவிச்சந்திரன், வி.கி.மதியழகன், துரைவீரமணி, பி.டி.சி.செல்வராஜ், காசி முத்துமாணிக்கம், துரை கபிலன், டாக்டர் வி.சி. ஆர்.குமரன், ஜி.சி.அன்புச்செழியன், ஆதிமாறன், க.அன்புச் செல்வன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். திவ்யா சத்தியநாதன், வனிதா ராமகிருஷ்ணன், ஜெ.சார்லஸ், டி. விமலேஷ், டி. திலீப்குமார், ஆர்.சூரிய மோகன், எம். எஸ்.ஆனந்தன், ஜி.ஆனந்தன், அறிவுநிதி செல்வசீமான் ஆகியோர் நன்றி கூறினர்.




ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சருமான சு,முத்துசாமி அறிவிப்புக்கு இணங்க முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் 101வது பிறந்தநாளையொட்டி ஈரோடு தெற்கு மாவட்ட கழக மகளிர் தொண்டரணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் எல்.பேபிலோகநாதன் ஏற்பாட்டில் வெண்டிய பாளையம் உதவும் உள்ளங்கள் குழந்தைகள் காப்பகத்திற்கு ரூ.15 ஆயிரம் மதிப்புள்ள அரிசி, காய்கறி, மளிகை உள்ளிட்ட நல உதவிகளை மாநில மாணவர் அணி துணை செயலாளர் வீரமணி(எ) சோனா ஜெயக்குமார் தலைமையில் வழங்கப்பட்டது. நிகழ்வில் செல்ல பொன்னி, ப.க.பழனிசாமி, டி.எஸ். குமாரசாமி, சு.குணசேகரன், வி.செல்வராஜ், வி.சி.நடராஜன் வில்லரசம்பட்டி முருகேசன், பொ. ராமச்சந்திரன், ஜெ.திருவாசகம், தண்டபாணி, நைல்ராஜா, எஸ்.ஜானகி, காந்திமதி, நாகரத்தினம், லீலா கனிமொழி, அமுதவள்ளி, திலகவதி, கிருஷ்ணவேணி, பத்மபிரியா, சித்ரா, கலைவாணி, உமாமகேஸ்வரி , விஜயா, நர்மதா மாலதி, இளமுருகு. அன்பு மதன், மணிசிவா. போட்டோ சுப்பு உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### கோவையில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் முப்பெரும் விழா!

# பெரம்பலூர் மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாகக் கலந்து கொள்வீர்!

## மாவட்ட பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் வேண்டுகோள்!



பெரம்பலூர், ஜூன் 14- ஜூன் 15ம் தேதி மாலை 4.00 மணியளவில் கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளும் முப்பெரும் விழா பொதுக்கூட்டத்தில் பெரம்பலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் பொருந்திரளாக கலந்து கொள்ள வேண்டுமென பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

வருகின்ற ஜூன் 15 ம் தேதி மாலை 4.00 மணி அளவில் கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சி தலைவர்கள் கலந்து கொள்ளும், முத்தமிழறிஞர், தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, நாற்பது நாடாளுமன்ற தொகுதிகளிலும் வெற்றி அளித்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா, சீர்முக வெற்றிக்கு கழகத்தை வழிநடத்தி சென்ற தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு பாராட்டு விழா என நடைபெறும் முப்பெரும் விழா பொதுக்கூட்டத்தில், பெரம்பலூர் மாவட்டத்தில் இருந்து திரளாக கலந்து கொள்ள வேண்டும்.

கூட்டத்தில் பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், வார்டு கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் இந்நாள் ஒன்றிய பெருந்தலைவர்கள், நகர் மன்ற தலைவர்கள், பேரூராட்சி தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள்,

மாவட்ட ஊராட்சி குழு, ஒன்றிய குழு உறுப்பினர்கள் மற்றும் நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், முன்னாள் இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, நகர, ஒன்றிய பேரூர் கழக இளைஞரணி, மாணவரணி, மகளிர் அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி,நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தக அணி, ஆதிதிராவிடர் நலக்குழு சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, தகவல் தொழில்நுட்ப பிரிவு, சுற்றுச்சூழல் அணி, தொழிலாளர் முன்னேற்ற சங்கம், அமைப்புசாரா ஓட்டுனர் அணி, ஆகிய அணிகளின் நிர்வாகிகள்,

வாக்குச்சாவடி முகவர்கள், கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.


ஐந்தாம் ஆண்டு
நினைவு அஞ்சலி

தோற்றம்
10.09.1937

மறைவு
14.06.2019



செம்மண்ணின்
பகுத்தறிவு சுடரே!

பெரியவர் எஸ்.சிவசுப்ரமணியன் M.A.,B.L., அவர்கள்
முன்னாள் பெரம்பலூர் மாவட்ட கழக செயலாளர் – முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

உங்கள் நினைவுகளுடன்...
சா.சி.சிவசங்கர்
மாவட்ட கழக செயலாளர் – அரியலூர் மாவட்டம்
போக்குவரத்துத் துறை அமைச்சர் – தமிழ்நாடு அரசு

கே.சி.லூயிகதிரவன் DCE.,
மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர்

ஆர்.கலியபெருமாள் B.E.,
ஒன்றிய கழக செயலாளர் - ஆண்டிமடம் (தெற்கு)